பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 21 வியாழக்கிழமை 07.01.2021 கதிர் 294

## ரயில் மோதிச் சாவு

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற ரயிலில் ஏறாவூர் ரயில் நிலையத்து அருகாமையில் தண்டவாளத்தில் வேலைக்கு நடந்து சென்ற ஒருவர் ரயிலுடன் மோதி உயிரிழந்த சம்பவம் இன்று வியாழக்கிழமை பகல் 11.15 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் 3 பிரிவு , மகளிர் பாடசாலை வீதியைச்சேர்ந்த 57 வயதுடைய

2

## வெகுவிரைவில் அரசு கவிழும்!

### ஜெய்சங்கருடனான சந்திப்பில் மனோ அணி சுட்டிக்காட்டு



இன்றைய இலங்கை அரசு செல்வாக்கு இழந்து வருகின்றது. வெகுவிரைவில் இனவாதம் இல்லாத இலங்கையை எமது தேசிய கூட்டணி உருவாக்கும்.

- இவ்வாறு இந்தியாவிடம் தெரிவித்துள்ளது தமிழ் முற்போக்குக் கூட்டணி.

மலையகத்தில் கடந்த ஒரு வருடமாக எந்தவொரு அபிவிருத்தியும் வாக்குறுதி, அறிவிப்பு என்ற அளவுகளில் மட்டுமே நிற்கின்றது.

2

# தமிழருக்கு நியாயம் கிடைக்க வேண்டும்!

### அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை எனக் கூட்டமைப்பிடம் ஜெய்சங்கர் உறுதி

**இலங்கைத் தமிழர்களுக்கு நீதி - நியாயம் கிடைக்க வேண்டும். அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கத்துடன் நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது. இந்த நிலைப்பாட்டில் மாற்றம் எதையும் இந்தியா ஏற்படுத்தாது. இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் இந்தியாவின் கவனம் தொடர்ந்து இருக்கும்.**

**- இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.**

2



## வடக்கில் நாள்தோறும் 600 இற்கு பி.சி.ஆர். அன்டிஜன் பரிசோதனை தேவையில்லை

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் தற்போதைய நிலைமையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் ஒரு நாளைக்கு 600 இற்கும் மேற்பட்டவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளக் கூடியதாகவுள்ளது. எனவே, எமக்கு அன்டிஜன் பரிசோதனை தற்போதைய நிலைமையில் தேவையற்ற ஒன்று.

- இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இன்று இடம்பெற்ற யாழ். மாவட்ட கொரோனாத்தடுப்புவிசேடஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

2



## தொண்டமானாறு கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மூவர் கைது!

அத்துமீறியமீன்பிடிநடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் மூவர் இலங்கை கடற்படையினரால் இன்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் வடமராட்சியின் தொண்டமானாறு கடற்பரப்பில் ஒரு படகில் மூவரும் கரைக்கு நெருக்கமான பகுதியில் மீன்பிடி நடவடிக்கையால்

2

## வெடிபொருள் மீட்பு



முல்லைத்தீவு அளம்பில் வடக்கு 50 ஏக்கர் பகுதியில் தனியார் ஒருவரின் காணியில் போரின் போது புதைக்கப்பட்ட வெடிபொருள்கள் கிடப்பதாக அரச புலனாய்வு பிரிவினருக்கு நேற்றுக் கிடைத்த தகவலுக்கு அமைய குறித்த இடத்தில் வெடி பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது கைக்குண்டு ஒன்று மற்றும் மோட்டார்குண்டு ஒன்று, ஆர்.பி.ஜி. குண்டு என்பன மீட்கப்பட்டுள்ளன. நீதிமன்ற உத்தரவிற்கு அமைய அவை அழிக்கப்படுவதற்காக முல்லைத்தீவு பொலிஸாரால் சிறப்பு அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### மீண்டும் மேயர் தெரிவை நடத்துங்கள்!

## ஆனோல்ட்டையும் மணிவண்ணனையும் மேயர் போட்டியில் அனுமதித்தமை தவறு!



### உள்ளூராட்சி ஆணையாளருக்கு தன் சட்டத்தரணி மூலம் கூட்டமைப்பு மாநரசபை உறுப்பினர் நிபந்தனைக் கடிதம்

யாழ் மாநகர சபை மேயர் தேர்வில் இமானுவேல் ஆனோல்ட் மற்றும் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோரைப் போட்டியிட அனுமதித்தமை சட்டத் தவறு எனத் தெரிவித்து வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.பற்றிக் டிரஞ்சனுக்கு தனது சட்டத்தரணி ஊடாக சட்ட நிபந்தனைக்

2



## வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி கொரோனா அவசர நிலைக்குப் பயன்பாடு

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரியை கொரோனா அவசர நிலையத்துக்குப் பயன்படுத்துவதற்காகக்கல்லூரிநிர்வாகத்தினருடன் கலந்துரையாடவுள்ளதாக யாழ். மாவட்ட கொரோனா ஒருங்கிணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற கொரோனா தடுப்பு தொடர்பில் ஆராயும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேஜர்

2

## யாழ்.சோதனையில் இன்று 11 பேருக்கு தொற்றுறுதி!

வடக்கு மாகாணத்தில் இன்றைய தினமும் 11 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வடமகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்பல்கலைக்கழகமருத்துவபீடஆய்வுக்கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 7 பேருக்கும் யாழ்ப்பாணம் மருதங்கேணியைச் சேர்ந்த இரண்டு

2

## தவறிவிட்டது

சந்திரகுமார் என்பவர் நேற்று தனது மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தினை யாழ்ப்பாணம் - ஆனைக்கோட்டைக்கு இடையில் தவறவிட்டுள்ளார். கண்டெடுப்பவர்கள் 0741235550 என்ற இலக்கத்துடன் அல்லது காலைக்கதிர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## யாழ்ப்பாணத்தில் வாக்காளர் பட்டியலில் இருந்து 42 ஆயிரம் பேர் நீக்கம்; 33 ஆயிரம் பேர் சேர்ப்பு

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2020ஆம்ஆண்டுக்கானவாக்காளர் பட்டியலில் இருந்து 42 ஆயிரத்து 234 பேர் நீக்கப்பட்டுள்ளனர். 2019 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 4 லட்சத்து 79 ஆயிரத்து 584 பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டனர். அதிலிருந்து 42 ஆயிரத்து 234 பேர் நீக்கப்படவுள்ளனர். 33 ஆயிரத்து 211 பேர் சேர்க்கப்படவுள்ளனர்.

போரால் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் வாக்காளர் பட்டியல் ஒவ்வொரு ஆண்டும்

2

## வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி )

ஜெனரல் செனரத் பண்டார மேற்கண்ட வாறு கூறியுள்ளார்.

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது யாழ். மாவட்டத்தில் கொரோனா நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருக்கின் றது எனவும், பொதுமக்களுக்கு விழிப்பு ணர்வை ஏற்படுத்துவதன் மூலம் தொடர்ச்சியாகத் தற்போதுள்ள நிலைமை யைப் பேண முடியும் எனவும் மேஜர் ஜெனரல் செனரத் பண்டார மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் தற்போது யாழ் மாவட்டத்தில் மூடப்பட் டுள்ள சந்தைகளைக் கொரோனா தாக் கம் காரணமாக மீளத் திறப்பது சாத்திய மில்லை எனவும் தீர்மானம் எடுக்கப்பட் டுள்ளது.

அத்துடன் கச்சதீவு புனித அந்தோ னியார் ஆலய வருடாந்த உற்சவத்தை மத்திய சுகாதார அமைச்சின் அனுமதியு டன் நடத்துவதா? இல்லையா? எனத் தீர்மானிக்கப்போவதாகவும் முடிவு எடுக் கப்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் இலங்கை பக்தர்கள் இந்த உற்சவத்தில் கலந்து கொள்வதால் இதற்கான முடிவை, மத்திய அரசுதான் எடுக்க முடியும் எனவும் தீர்மானம் எடுக் கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் க. மகேசன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத் தியர் ஆ. கேதீஸ்வரன், யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியும் மாவட்ட கொரோனா கட்டுப்பாட்டு அதி காரியுமான மேஜர் ஜெனரல் செனரத் பண்டார, வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர், யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங் கோவன், யாழ். மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர், இராணுவ உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், சுகாதார வைத்தி ய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோத கர்கள் எனப் பலரும் கலந்து கொண் டமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி )

மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. 2010 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியல் மீளாய்வு செய்யப்பட்டபோது 4 லட்சம் பேரின் பெயர்கள் அதிலிருந்து நீக்கப் பட்டன.

அதன்பின்னர் ஒவ்வொரு ஆண்டும் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது. எனி னும் வலி. வடக்கில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத கிராம அலுவலர் பிரி வுகள் இந்த மீளாய்வில் சேர்க்கப்படுவ தில்லை.

2019ஆம் ஆண்டு வாக்காளர் பெயர் பட்டியல் மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட போது, வலி. வடக்கில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படாத கிராம அலுவலர் பிரிவுகளை மீளாய்வுக்குள் உட்படுத் துவது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்தக் கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் உள்நாட்டில் இருந்தாலும், வெளிநாட்டில் இருந்தாலும் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப் பட்டிருந்தது. அதற்காகச் சிறப்பு விண் ணப்பப் படிவமும் வெளியிடப்பட்டி ருந் தது.

எனினும் அரசியல் அழுத்தங்களால், இறுதித் தருணத்தில் அந்த முயற்சி கைவிடப்பட்டிருந்தது. எனினும் இறுதிச் சந்தர்ப்பம் இதுவே என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியிருந்தது.

2020ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் மீளாய்வில் மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்படாத 21 கிராம அலுவலர் பிரிவுகளும் உட்படுத்தப்பட்டன.

இந்தக் கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இதுவரை நடந்த ஏதாவது ஒரு தேர்தலில் நாட்டின் எந்த இடத்தி லாவது வாக்களித்திருந்தால் அவர்களின் பெயர்கள் நீக்கப்படவில்லை.

அவ்வாறு அல்லாத 21 ஆயிரத்து 905 பேரின் பெயர்கள் வாக்காளர் பட்டி யலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒவ் வொரு ஆண்டும் ஆகக் குறைந்தது 7 ஆயிரம் பேரால் யாழ்ப்பாண மாவட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை அதி கரித்து வந்தது.

தற்போது 9 ஆயிரம் பேரால் வாக் காளர் எண்ணிக்கை குறைந்துள்ளது.

இது, தேர்தலில் ஆசன எண்ணிக்கை மற்றும் பல்கலைக் கழக அனுமதி என்ப வற்றில் தாக்கம் செலுத்தும்.

இந்தப் பெயர் பட்டியல் பெப்ரவரி முத லாம் திகதி இறுதி செய்யப்படும். வாக்கா ளர் பட்டியலில் இருந்து நீக்கப்படுவோர் மற்றும் சேர்க்கப்படுவோரின் விவரங்கள் காட்சிப்படுத்தப்படும்.

அது தொடர்பான ஆட்சேபனைகளை உரிமைக் கோரிக்கைப் படிவங்கள் ஊடா கக் கையளிக்க முடியும் என்று யாழ்ப்பா ணம் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் கி. அமல்ராஜ் தெரிவித் தார்.

## யாழ். சோதனையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி )

பேருக்கும் சங்கானை சேர்ந்த ஒருவ ருக்கும் ஆக 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுக்கூடத் தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை யில் உடுவிலை சேர்ந்த ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

## ஆனோல்ட்டையும் மணி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி )

கடிதம் அனுப்பியுள்ளார் யாழ் மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் முத்து முகம்மது முகம்மது நிபாகர்.

ஐக்கிய தமிழ் சட்ட நடவடிக்கைக் கவுன்ஸிலின் ஸ்தாபகர் சட்டத்தரணி ஸ்ரனிஸ்லஸ் செலஸ்ரின் ஊடாக இக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

சட்டத்தினால் 'பதவியை இராஜினா மாச் செய்தவர்' என வகைப்படுத்தப்பட்ட இமானுவேல் ஆனோல்ட் மீண்டும் தேர்வுக்கு அனுமதித்தமை சட்டத் தவறு -

மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக் கப்பட்ட மாநகர சபை உறுப்பினரே மே யர் பதவிக்குப் போட்டியிடலாம் என்று தான் சட்டம் கூறுகின்றது. பட்டியல் மூலம் மாநகர சபை உறுப்பினர் நியமனம் பெற்ற மணிவண்ணனை இப்பதவித் தேர்வுக்கு அனுமதித்தமையும் சட்டத் தவறு -

என்பன உட்படப் பல விடயங்கள் இந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிக்காத மணிவண்ணனுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை, அவரது கட்சியிலிருந்து அவர் நீக்கப் பட்டமை உட்படப் பல விடயங்கள் இக் கடிதத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி உதவி ஆணையாள ரின் நடவடிக்கையால் ஏற்பட்டுள்ள சட் டத்தவறை ஐந்து நாள்களுக்குள் திருத்தி மீளவும் சட்டத்திற்கு உட்பட்டு, சட்ட ரீதி யான முறையில் புதிதாக மேயர் தெரிவை நடத்துமாறும் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் இமானுவேல் ஆனோல்ட், மணிவண்ணன், யாழ். மாநகர சபை ஆணையாளர், பிரதி மேயர் து. ஈசன், யாழ் மாநகர சபை செயலாளர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன் னம்பலம், செயலாளர் செல்வராசா கஜேந்திரன், வடக்கு ஆளுநர், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோன், அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பப் பட்டன.

## வெகுவிரைவில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி )

எனவே, இந்தியத் தோட்டத்துறை வீட்டு மற்றும் நலத்திட்டங்கள் உடன் மீள ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் இந் தியாவிடம் தமிழ் முற்போக்குக் கூட்டணி வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்குப் பயணம் மேற் கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தூதுக்குழு இன்று கொழும்பிலுள்ள இந்திய இல் லத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தியது.

கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையிலான குழுவில் பிரதித்தலைவர் வே. இராதாகிருஷ்ணன், பொதுச்செயலாளர் சந்திரா சாப்டர் ஆகி யோர் இடம்பெற்றனர்.

இதன்போது இலங்கைவாழ் இந்திய வம்சாவளி மக்கள் மற்றும் ஒட்டுமொத்த தமிழ் மக்கள் தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

கடந்த ஒருவருடமாக மலையகத்தில் எந்தவொரு அபிவிருத்தியும் வாக்குறுதி, அறிவிப்பு என்ற அளவுகளில் மட்டுமே நிற்கின்றது. ஆகவே, இந்திய தோட்டத் துறை வீட்டு மற்றும் நலத்திட்டங்கள் உடன் மீள ஆரம்பிக்கப்பட வேண்டும், இராமேஸ்வரம் -மன்னார், தூத்துக்குடி - கொழும்பு கப்பல் சேவையை ஆரம் பிக்க உங்கள் பக்கத்தில் ஆவன செய் யுங்கள், நோர்வூட் கிளங்கன், நுவரெ லியா மருத்துவமனைகளுக்கு பி.சி.ஆர். இயந்திரங்கள் இரண்டு கொடுங்கள், இந்தியா, இலங்கையின் உண்மை நண்பன் என்பதை சிங்கள மக்களுக்கு விளக்கி கூறி எடுத்துக்காட்டுங்கள் ஆகிய கோரிக்கைககள் தமிழ் முற்போக்குக் கூட்டணியால் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டது.

அத்துடன், அரசமைப்பின் 13ஆவது திருத்தம், மாகாண சபைகள் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு வரவேற்கத் தக்கது, புதிய அரசியலமைப்பு வரைபு குழுவுக்கு, தமிழ் முற்போக்குக் கூட்டணி யோசனைகளை முன்வைத்துள்ளது, எதிரணியில் இருந்தாலும் நாமே, இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக் களின் பெரிய அரசியல் இயக்கம், இன்றைய இலங்கை அரசு செல்வாக்கு இழந்து வருகின்றது, வெகு விரைவில் இனவாதம் இல்லாத இலங்கையை எமது தேசிய கூட்டணி உருவாக்கும் ஆகிய கருத்துகளும் தமிழ் முற்போக்குக் கூட்டணியால் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

மேலும், இன்றைய நரேந்திர மோடி அரசே, இலங்கையில் வாழும் எமது மக் கள் மீது அதிக அக்கறை காட்டுகிறது. அதன் பிரதிபலிப்பாகவே, இந்தியாவுக்கு வெளியே மிகப்பெரும் மக்கள் கூட்டத்தை நாம் பிரதமர் மோடிக்காக நோர்வூட்டில் கூட்டினோம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியினர் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரிடம் கூறி, பிரதமர் நரேந்திர மோடிக்கு வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டனர்.

இந்தச் சந்திப்பின்போது இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்க ருடன் இலங்கைக்கான இந்தியத் தூது வர் கோபால் பாக்லே மற்றும் தூதரக அதிகாரிகள் ஆகியோரும் கலந்துக் கொண்டனர்.

## தமிழருக்கு நியாயம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி )

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு வந்துள்ள இந்திய வெளி விவகார அமைச்சர், கொழும்பில் இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தே சியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களை இன்று சந்தித்து பேச்சு நடத்தினார். குறித்த சந்திப்பு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் காலை 9.30 மணி முதல் 10.30 மணிவரை நடை பெற்றது. இதன்போதே அவர் மேற்கண் டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒருமித்த நாட்டுக்குள்தான் தமிழர் கள் தீர்வு கேட்கின்றார்கள். எனவே, அவர் களின் அபிலாஷைகளான நீதி, சமாதா னம், சமத்துவம், கௌரவம் உள்ளடங்க லான தீர்வைப் பெற்றுக்கொடுப்பது இலங்கை அரசின் பிரதான கடமை என் பதை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளி விவகார அமைச்சர் ஆகியோருடனான சந்திப்பில் நான் எடுத்துரைத்துள்ளேன்.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதை நீங்களும் (கூட்ட மைப்பும்) வலியுறுத்துங்கள். இல்லை யேல் அது இல்லாமல் போய்விடும் ஆபத்து உண்டு.

இந்தியாவினதும் இலங்கையினதும் இணக்கத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் முழு மையாக அமுல்படுத்தப்பட வேண்டும். இதை இலங்கை அரசின் கவனத்துக் கொண்டு வந்துள்ளேன். வடக்கு, கிழக் கின் அபிவிருத்திக்கு இந்தியா தொடர்ந்து உதவிகளைச் செய்யும். போரால் பாதிக்கப் பட்ட தமிழ் மக்களின் நலனில் இந்தியா அதிக சிரத்தை கொண்டுள்ளது - என்றார்.

இந்திய வெளிவிவகார அமைச்சரு டன் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார். அதேவேளை, கூட்ட மைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடன் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராஜா (இலங்கைத் தமிழரசுக் கட்சி), நாடாளுமன்ற உறுப்பி னர் செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) மற் றும் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதி பதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் ஆகி யோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## வடக்கில் நாள்தோறும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி )

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏனைய மாகாணங்களில் குறித்த அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப் படுகின்றது. ஏனெனில் அந்த மாகாணங் களில் எமது மாகாணத்தைப் போல் பி.சி. ஆர். பரிசோதனை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதன் காரணமாக அவர்கள் மேற்கொள்கின்றார்கள்

அத்துடன் அன்டிஜன் பரிசோதனை யில் ஒரு சில நம்பிக்கையில்லா தன்மை யும் காணப்படுகின்றது. அன்டிஜன் பரி சோதனையில் ஒருவருக்குத் தொற்று எனக் காண்பிக்குமாயின் அவருக்குப் பி.சி.ஆர். பரிசோதனை செய்யும்போது அவ ருக்குத் தொற்று இல்லை எனக் காண் பிக்கும்.

அதேபோல் அன்டிஜன் பரிசோதனை யின்போது ஒருவருக்குத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தியவரை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தும்போது அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்படும்

எனவே, அன்டிஜன் பரிசோதனை என்பது மிகவும் நம்பகரமான சோதனை முறை அல்ல. மேலும், வடக்கு மாகா ணத்தில் போதியளவு பி.சி.ஆர். பரிசோ தனை மேற்கொள்ளக்கூடியதாக இருப் பதன் காரணமாக நாம் தற்போது அதைப் பற்றி பரிசீலிக்கத் தேவையில்லை

அத்தோடு வெளிமாவட்டங்களில் இருந்து ஆனையிறவு மற்றும் பூநகரிப் பாதை ஊடாக வருவோருக்கு நாம் அதி காலை வேளைகளில் பி.சி.ஆர். சோத னைகளைத் தொடர்ச்சியாக முன்னெ டுத்து வருகின்றோம்

யாழ். மாவட்டத்தில் தனிமைப்படுத்தப் பட்டுள்ளோர் தொற்றாளர்களுடன் நேரடி தொடர்பில் இருந்தோருக்கு நாம் ஒவ் வொரு நாளும் பி.சி.ஆர். பரிசோதனை களை மேற்கொண்டு வருகின்றோம் - என்றார்.

## தொண்டமானாறு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி )

ஈடுபட்டிருந்தபோதே கைதாகியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் காங்கேசன் துறை கடற்படைமுகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர் என முதற்கட்டத் தகவல் கள் தெரிவிக்கின்றன. இதேவேளை -

யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடற்பரப் பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர் கள் 26 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர்களுக்கு கொரோனாத் தொற்று இல்லை என்றும் எதிர்வரும் 11ஆம் திகதி மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனை மேற் கொள்ளப்பட்டு மீண்டும் தொற்று இல்லை என்றால் 13 ஆம் திகதி அவர்கள் ஊர்கா வற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரயில் மோதிச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி )

ஜமால்டீன் என்பவரே இவ்வாறு உயிரி ழந்துள்ளார். ரயிலுடன் மோதி படுகாயம டைந்த நிலையில் ஏறாவூர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தேசிய நல்லிணக்கமா? அது கிலோ என்ன விலை?

“இல்லாத மேடை ஒன்றில் எழுதாத நாடகத்தை எல்லோரும் நடக்கின்றோம்; நாமே எல்லோரும் பார்க்கின்றோம்.”

‘அபூர்வ இராகங்கள்’ படத்திற்கு கண்ணதாசன் எழுதிய பாடலின் வரிகள் இவை.

கடந்த செவ்வாயன்று ஆளுங்கட்சித் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வடக்கு ஆளுநருமான கலாநிதி சுரேன் இராகவன் ஆற்றிய உரையைக் கேட்டபோது இந்தப் பாடல் வரிகள்தாம் எவருக்கும் நினைவுக்கு வந்திருக்கும்.

சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்த சுரேன் இராகவன், செஞ்சோற்றுக் கடன் தீர்க்க அப்படித்தான் பேச வேண்டும். வேறு வழியில்லை.

அதற்காக இல்லாத விடயத்தை, இருப்பது போல அவர் காட்ட முயல்கின்றார்.

அதையேதான் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனும் அன்றைய தினமே நாடாளுமன்றத்தில் கேள்வியாக சுரேன் இராகவனின் முன்னால் வைத்திருக்கின்றார்.

கனடாவின் ஒன்டாரியோ மாநிலத்தில் கொண்டு வரப்படும் ஒரு சட்டப் பிரேரணை இலங்கையின் தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டை அழிக்கின்றது என நாடாளுமன்றத்தில் முதலைக் கண்ணீர் வடித்திருக்கின்றார் சுரேன் இராகவன் எம்.பி.

“இந்த நாட்டில் இன்று எங்கே ஐயா தேசிய நல்லிணக்கம் இருக்கின்றது? ஒன்டாரியோ நாடாளுமன்றம் சட்டம் கொண்டு வந்து அழித்து முடிப்பதற்கு முதலில் இங்கே எங்கே தேசிய நல்லிணக்கம் இருக்கின்றது? சொல்லுங்கள் பார்க்கலாம்!” என்று சுரேன் இராகவனைக் கேட்டிருக்கின்றார் மனோ கணேசன் எம்.பி.

மிகச் சரியான கேள்வி.

தேசிய நல்லிணக்கத்தை அழிப்பதற்கு வெளியில் எங்கோ பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு நாட்டின் மாகாண அரசு பிரேரணை கொண்டு வரத் தேவையில்லை. இங்கு இருக்கும் – அரசின் – ஆட்சிப் பீடத்தின் – அதிகாரத் தரப்பாரின் – முழு நோக்கும், போக்கும், இலக்கும் அதுதானே…?

நல்லிணக்கத்தை இனங்களுக்கு இடையில் ஏற்படுத்த வேண்டுமானால், அதற்கு முதலில் செய்ய வேண்டிய வேலை பாதிக்கப்பட்ட தரப்புகளுக்காக நீதி, நியாயம் வேண்டிக் குரல் எழுப்புவதுதான். அடக்குமுறையை மேற்கொள்ளும் தரப்பை சிலாகித்துப் போற்றிப் பந்தம் பிடித்துப் புளுகுவதல்ல.

இந்த நாட்டில் முழுவதாக அழிந்து போன நிலையில் – தற்போதைய ஆட்சியாளர்களினால் இதுவரை எச்ச சொச்சமாக இருந்த கொஞ்ச நஞ்ச இணக்கப்பாடும் அழிக்கப்பட்ட நிலையில் – ‘இல்லாத’ ஒன்று பற்றியே, எழுதாத நாடகமாக நாடாளுமன்றத்தில் நடிக்கின்றார் சுரேன் இராகவன்.

சிறுபான்மையினரை அடக்கி, ஒடுக்க, இந்த நாட்டில் மூன்றாம் தரப்பிரஜைகளாக முடக்கி விட்டு, பௌத்த – சிங்களப் பேரினவாதிகளின் மேலாண்மையை மேலாதிக்கமாக இங்கு நிலைநிறுத்துவதுதான் ‘தேசிய நல்லிணக்கம்’ என்றால், அந்த அடக்குமுறைக்காக சுரேன் இராகவன் குரல் எழுப்பலாம். அதில் நியாயமுண்டு. அவர் தமது, சுயநல அரசியல் லாபத்துக்காக ஏற்றிப் போற்றித் துதிக்கும் ராஜபக்ஷக்கள் அந்த அடக்குமுறையை சிறுபான்மையினர் மீது ஏவி விட்டபடி, அதனைத்தான் தேசிய நல்லிணக்கம் என்கின்றனர்.

சிறுபான்மை இனங்கள் தமது மதத்தை, மொழியை, கௌரவ வாழ்வை, பண்பாட்டுக் கோலங்களை, தனித்துவச் சிறப்பை எல்லாம் சிங்களத்தின் கபளீகர ஏப்பத்துக்குப் பறி கொடுத்து விட்டு அடங்கிப் போவதுதான் ‘நல்லிணக்கம்’ என்று நம்புகின்றாரா சுரேன் இராகவன்? அப்படி நினைத்தால் இலங்கையில் அந்தத் தேசிய நல்லிணக்கத்துக்காக அவர் கவலை தெரிவித்துப் பேச முடியும்.

சிறுபான்மை இனங்கள், இந்தத் தீவில் தனி இனங்களாகத் தம்மை அடையாளப்படுத்துவதற்கு அடிப்படையாக அமையும் ஒவ்வொரு காரணியையும் சுரேன் இராகவன் எம்.பி. பிரதிநிதித்துவம் செய்யும் பௌத்த, சிங்களப் பேரினவாத அரசு, திட்டமிட்டு, இலக்கு வைத்து அழித்து வருகின்றது என்பது கண்கூடு.

நமது புலம்பெயர் உறவுகளும், எம் மீது கரிசனை கொண்ட சர்வதேச நாடுகளும் இல்லாவிட்டால், இந்த நாட்டில் தமிழர், முஸ்லிம்கள் என்ற சிறுபான்மையினர் வாழ்ந்தனர் என்ற சுவடே இல்லாமல் அழிக்கும் முயற்சி தீவிரமாக இடம்பெற்றிருக்கும்.

சிறுபான்மையினர் ஒரிருவருக்கும் நாங்கள் எம்.பி. பதவி வழங்கியிருக்கின்றோம் என்று உலகத்தின் கண்களில் மண்ணைத் தூவுவதற்காக சிங்கள அரசு எடுத்த நடவடிக்கையே சுரேன் இராகவனுக்குக் கிடைத்த எம்.பி. பதவிப் பிச்சை.

அந்தப் பதவியில் இருந்து கொண்டு, தமது தமிழ் மக்களுக்கு தேசிய நல்லிணக்கம் மூலம் இனப் பாதுகாப்பு, இணக்கத் தீர்வு, கௌரவ வாழ்வு, தனித்துவத்தைப் பேணும் உறுதிப்பாடு ஆகியவை தொடர்பில் சாதகமான ஒரு துரும்பைக் கூட அசைக்க முடியாத – லாயக்கற்ற – நிலையில் இருந்து கொண்டு புலம்பெயர் தேசத்தில் உள்ள நம்மவர்களின் முயற்சியைக் குழப்பியடிப்பதற்கு அவர் எத்தனிப்பது பெரும் அபத்தமாகும்.

# சர்வதேசப் பிரச்சினைகள் ஏற்பட ஒழுங்கற்ற அரசமைப்பே காரணம்

## சபையில் சுட்டிக்காட்டினார் கிரியெல்ல

**சர்வதேசத்தை வெற்றிகொள்ளக்ககூடிய அரசமைப்பு ஒன்றைத் தயாரிப்பதாக இருந்தால், முழு நாடாளுமன்றப் பிரதிநிதிகளையும் இணைத்துக்கொண்டு அதனை மேற்கொள்ளவேண்டும். அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் நாட்டில் அரசமைப்பு இல்லாமையே சர்வதேசப் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு காரணமாகும்.**



– இவ்வாறு எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நீதி அமைச்சின் கீழ் உள்ள தண்டனைச் சட்டக்கோவை, பிணை மற்றும் சான்று (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

அரசு புதிய அரசமைப்பைத் தயாரிக்கும் பணியை ஆரம்பித்திருக்கின்றது எனத் தெரிவித்திருக்கின்றது. ஆனால், இந்த அரசமைப்பு தயாரிப்புப் பணியில் அரசுக்கு நெருக்கமானவர்களை மாத்திரமே ஒன்றிணைத்துக் கொண்டிருக்கின்றது.

அவ்வாறு அமைக்கப்படும் அரசமைப்பு அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ள முடியுமாக இருக்குமா எனக் கேட்கின்றேன்.

1947ஆம் ஆண்டு சோல்பரி சாமி எமது நாட்டுக்கு புதிய அரசமைப்பைத் தயாரிக்க வந்தபோது, அனைத்துக் கட்சிகள் மற்றும் இன மக்களுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தார்.

சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் 29ஆவது சரத்தை முன்னிலைப்படுத்தினார். அவ்வாறுதான் சுதந்திரமான யாப்பு அமைக்கப்பட்டது.

நாடு சுதந்திரமடைந்த பின்னர் நாங்கள் இரண்டு தடவைகள் அரசமைப்பைத் தயாரித்தோம். பண்டாரநாயக்க அம்மையாரின் குடியரசு யாப்பு அரசமைப்பு மற்றும் ஜே.ஆரின் ஜனாதிபதி முறைமை அரசமைப்பு.

இந்த இரண்டு அரசமைப்புத் தயாரிப்பின் போதும் சிறுபான்மைக் கட்சிகள் கலந்துகொள்ளவில்லை. குறிப்பாக தமிழ்க் கட்சிகள் கலந்துகொள்ளவில்லை. அதனால்தான் இந்த இரண்டு யாப்புகளுக்கும் விமர்சனங்கள் வந்தன.

அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையிலான அரசமைப்பைத் தயாரிப்பதாக இருந்தால், அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்துவப்படும் வகையில் குழுவொன்றை அமைத்து அரசமைப்பைத் தயாரிக்கவேண்டும்.

நல்லாட்சி அரசில் புதிய அரசமைப்புதயாரிப்புக்காக முழு நாடாளுமன்றத்தையும் அரசமைப்பு சபையாக நாங்கள் ஏற்படுத்தினோம்.

நாடாளுமன்றத்தால் 20 குழுக்களை அமைத்தோம். அந்த 20 குழுக்களாலும் 20 அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தோம். அரசமைப்பு இடைக்கால அறிக்கை ஒன்றைத் தயாரித்து நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்தோம்.

நாடாளுமன்றத்தில் 90 வீதமானவர்கள் அதற்கு ஆதரவாக இருந்தனர். புதிய அரசமைப்பு தயாரிக்கப்பட்டு முடியும் தறுவாயிலே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

மேலும் அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையிலே அரசமைப்பு தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறான அரசமைப்பு நாட்டில் ஏற்படுத்தப்படாததாலே சர்வதேசப் பிரச்சினைகள் ஏற்படுவதற்குக் காரணமாகும். அதனை நாங்கள விளங்கிக்கொள்ளவேண்டும். அவ்வாறு இல்லாமல் தங்களுக்கு நெருக்கமான சட்டத்தரணிகளை மாத்திரம் இணைத்துக்கொண்டு அரசமைப்பு தயாரித்தால், முன்னர் இருந்த அரசமைப்புக்களுக்கு ஏற்பட்ட நிலையே இதற்கும் ஏற்படும்.

அதனால் சர்வதேசத்தை வெற்றிகொள்ளக்கக்கூடிய அரசமைப்பு ஒன்றைத் தயாரிப்பதாக இருந்தால், முழு நாடாளுமன்றப் பிரதிநிதிகளையும் இணைத்துக்கொண்டு அதனை மேற்கொள்ளவேண்டும்.– என்றார்.

## பிரபல சைவ உணவகம் தனிமைப்படுத்தப்பட்டது!

**யாழில் சம்பவம்**

யாழ். நகரில் உள்ள பிரபல சைவ உணவகம் ஒன்றைத் தனிமைப் படுத்தியுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை புலோலி பகுதியில் கொரோனா தொற்றுக்குள்ளான நபர் கடந்த 31 ஆம் திகதி அந்த உணவகத்துக்கு வந்து சென்றுள்ளார்.

இந்நிலையில் நேற்று காலையில் இருந்து அந்த உணவகம் சுகாதார அதிகாரிகளால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அங்கு கடமையாற்றிய ஊழியர்கள் 11 பேரும் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவில் பதற்றமான சூழ்நிலை; வொஷிங்டன் இலங்கை தூதரகம் பூட்டு!

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலைகள் காரணமாக ஜனவரி 10 ஆம் திகதி வரை வொஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் மூடப்பட்டுள்ளது. அதனால் அவசர தேவைகளுக்காகப் பின்வரும் முறையினூடாகத் தொடர்புகொள்ளுமாறு தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அவசர சேவைகளுக்கு: slembassyslem-bassyusa.org

தூதரக விடயங்கள்: consularofficerslembassyusa.org (மின்னஞ்சல்)

தூதரக தொலைபேசி எண் : (202) 580 9546

அமெரிக்க நாடாளுமன்றத்தை றொனால்ட் ட்ரம்ப்பின் ஆதரவாளர்கள் முற்றுகையிட்டபோது நடந்த துப்பாக்கிச்சூட்டில் பெண் உயிரிழந்த சம்பவம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் நீடிக்கும் சீரற்ற காலநிலை: கண்டி - அக்குறணையில் வெள்ளம்

நாட்டில் நீடிக்கும் சீரற்ற காலநிலை காரணமாக கண்டி – அக்குறணைப் பகுதியில் தொடர்ந்தும் வெள்ள நிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக கண்டியிலிருந்து மாத்தளை வரை பயணிப்போர் மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மாற்று வீதியாக வத்தேகம ஊடாக மாத்தளைக்கு பயணிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி இரணைமடு குளத்தின் நீரேந்து பிரதேசத்தில் பெய்து வரும் மழை காரணமாக 06 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், சப்ரகமுவ, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் கண்டி மாவட்டங்களில் நேற்றும் 100 மில்லிமீற்றர் வரை மழை பெய்தது என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

ஏனைய பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யலாம் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் பலத்த காற்றும் வீசக்கூடும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது. இதன் காரணமாக மக்களை அவதானமாக செயற்படுமாறு அந்தத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

# வெள்ளத்தில் சிக்கி 600 ஆடுகள் பலி கள்ளக்குறிச்சியில் நடந்த கொடூரம்!

## தலையில் அடித்து கதறிய உரிமையாளர்கள்



தமிழ்நாகள்ளக்குறிச்சி அருகே கனமழை காரணமாக வெள்ளத்தில் சிக்கி அறுநூறுக்கும் மேற்பட்ட ஆடுகள் உயிரிழந்த பரிதாப சம்பவம் நடந்துள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் அருகேயுள்ள பாவளம் கிராமத்தில் கருத்தா பிள்ளை, மற்றும் பழனி அஞ்சலை ஆகியோருக்குச் சொந்தமான ஆட்டுக் கொட்டகை உள்ளது. இங்கு சுமார் 600 செம்மறி ஆடுகளை வளர்க்கப்பட்டன. இந்த ஆடுகளை விற்றுதான் தங்கள் பிழைப்பை அவர்கள் நடத்தி வந்தனர்.

இந்த நிலையில், கள்ளக்குறிச்சி சுற்று வட்டாரத்தில் கடந்த இரு நாள்களாக கன மழை பெய்து வருகிறது. அதிகப்படியாக சங்கராபுரம் பகுதியில் 10 செ.மீ மழை பெய்தது. இதனால், பாவளம் கிராமத்தில் உள்ள ஓடையில் வெள்ளம் ஏற்பட்டு, ஆட்டு கொட்டகைக்குள் தண்ணீர் நுழைந்தது.

சுமார் 600 ஆடுகள் வெள்ளத்தில் சிக்கி பரிதாபமாக இறந்து போனதாக சொல்லப்படுகிறது. காலையில் ஆட்டு கொட்டகைக்கு வந்த கருத்தா பிள்ளை, பழனி, அஞ்சலை ஆகியோர் தங்கள் கொட்டகையில் ஆடுகள் இறந்து கிடப்பதை பார்த்து தலையில் அடித்துக் கொண்டு கதறி துடித்தனர்.

வெள்ளத்தில் பலியான 600 ஆடுகளின் மதிப்பு லட்சக் கணக்கில் இருக்குமென்று சொல்லப்படுகிறது. அக்கம் பக்கத்தினர் அவர்களுக்கு ஆறுதல் கூறி வருகின்றனர்.

# காதலி வந்ததால் மாயமான மணமகன்; திடீர் மாப்பிள்ளையான பஸ் கண்டக்டர்

## கர்நாடகம் சிக்மகளூரு மாவட்டத்தில் சம்பவம்

காதலி மிரட்டியதால் மாப்பிள்ளை மாயமாகி விட, திருமணத்துக்கு வந்த பஸ் கண்டக்டர் திடீர் மணமகனான சம்பவம் கர்நாடகத்தில் நிகழ்ந்துள்ளது.

கர்நாடக மாநிலம் சிக்மகளூரு மாவட்டம் பைதி பைந்தூர்நாலா கிராமத்தை சேர்ந்த நவீனுக்கும் சிருங்கேரியை சேர்ந்த சிந்து என்பவருக்கும் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டிருந்தது. திருமணம் சிருங்கேரியில் கடந்த 5 ஆம் திகதி (நேற்று முன்தினம்) நடைபெறவிருந்தது. நவீன் ஏற்கெனவே வேறு ஒரு பெண்ணை காதலித்து வந்ததார் எனத் தெரிகிறது. இந்த நிலையில், நவீனுக்கு திருமணம் நடப்பதை அறிந்த அந்தப் பெண் நேரடியாகத் திருமண மண்டபத்துக்கே வந்து விட்டார்.

வரவேற்பு நிகழ்ச்சி முடியும் வரை அமைதியாக காத்திருந்த அந்த பெண் நவீனை தனியாகச் சந்தித்துப் பேசியுள்ளார். அப்போது, என்னை ஏமாற்றிவிட்டு திருமணம் செய்துகொண்டால்,



நாளை காலை மண்டபத்துக்கு வந்து அனைவர் முன்னிலையிலும் உண்மையைக் கூறி உன் திருமணத்தை நிறுத்திவிடுவேன் என்று மிரட்டி சென்று விட்டார். இதனால், பயந்து போன நவீன் யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் மண்டபத்தில் இருந்து ஓட்டம் பிடித்து விட்டார்.

இந்த நிலையில், காலையில் திருமணத்துக்கான ஏற்பாடுகள் தடபுடலாக நடந்தது. உறற்ார், உறவினர்கள், நண்பர்கள் மண்டபத்தில் திரண்டிருந்தனர். தாலி கட்டும் நேரம் வந்தும் மணமகன் நவீன் மேடைக்கு வரவில்லை. மணமகள் மட்டும் தனியாக இருந்தார். அப்போதுதான் மணமகன் நவீன், திருமண மண்டபத்தில் இருந்து ஓட்டம் பிடித்தது தெரியவந்தது.

இதனால் , இருவீட்டாரும் கடும் அதிர்ச்சி அடைந்தனர். பெண் வீட்டார் செய்வதறியாது திகைத்து நின்றனர். மணப்பெண் கண்ணீர் விடத் தொடங்கினார். இதனால், திருமண மண்டபம் சோகமயமானது. இந்த சமயத்தில் திருமணத்துக்கு வந்திருந்த சிருங்கேரியைச் சேர்ந்த சந்துரு என்ற இளைஞர் தான் சிந்துவை திருமணம் செய்து கொள்வதாக முன்வந்தார். இதற்கு, பெண் வீட்டார் சம்மதம் தெரிவிக்க அதே மேடையில் சந்துரு - சிந்து திருமணம் சிறப்பாக நடந்து முடிந்தது.

திருமணத்துக்கு வந்திருந்த உறவினர்கள், நண்பர்கள் மணமக்களை மனதார வாழ்த்திவிறு நிறைய விருந்து உண்டு சென்றனர். திடீர் மாப்பிள்ளையான சந்துரு, சிக்கமகளூருவில் அரசு பஸ் கண்டக்டராக வேலைபார்த்து வருகிறார்.

# வீட்டுக்கு ஒரு கம்பியூட்டர் கமலின் தேர்தல் வாக்குறுதி

வரும் சட்டசபை தேர்தலில் மக்கள் நீதி மையம் கட்சி ஆட்சிக்கு வந்தால், வீட்டுக்கு ஒரு கம்பியூட்டர் வழங்கப்படும் என அக்கட்சித் தலைவர் கமல்ஹாசன் வாக்குறுதியளித்தார்.

நடிகரும் மக்கள் நீதி மய்யம் கட்சித்தலைவருமான கமல்ஹாசன், வரும் சட்டசபை தேர்தலுக்காக இப்போது இருந்தே பிரசாரம் செய்து வருகிறார். பிரசாரத்தின்போது சில வாக்குறுதிகளையும் அவர் வெளியிட்டு வருகிறார். அந்தவகையில் இல்லத்தரசிகளுக்கு ஊதியம் வழங்கும் திட்டத்தையும் கூறினார். இதற்கு பலர் ஆதரவு கருத்து தெரிவித்தனர்.

இந்நிலையில், வேலூர் மாவட்டம் குடியாத்தம், காட்பாடி, அணைகட்டு பகுதிகளில் பிரசாரம் மேற்கொண்டார். காட்பாடியில் கொட்டும் மழையில் நனைந்தபடி மக்கள் மத்தியில் பிரசாரம் செய்தார்.

பின்னர் வேலூர் அண்ணா சாலையில் உள்ள தனியார் மண்டபத்தில் கட்சி நிர்வாகிகளைச் சந்தித்து பேசுகையில், மக்கள் நீதி மையத்தின் வளர்ச்சியை பிடித்தவர்கள், பிடிக்காதவர்கள் கூட இப்போது வியந்துபோய் பார்க்கின்றனர். தமது கட்சி ஆட்சிக்கு வந்தால் வீட்டிற்கு ஒரு கம்பியூட்டர் வழங்கப்படும்,'என தெரிவித்தார்.

# டெல்லியில் விவசாயிகள் இன்று டிராக்டர் பேரணி!



புதுடில்லி,ஜன.07

அரசுடன் நாளை பேச்சு நடைபெற உள்ள நிலையில் டெல்லியில் விவசாயிகள் இன்று டிராக்டர் பேரணியில் ஈடுபட்டனர்.

மத்திய அரசின் புதிய வேளாண் சட்டங்களைத் திரும்ப பெறக்கோரி டெல்லியின் சிங்கு, திக்ரி, காஜிப்பூர் உள்ளிட்ட எல்லைப் பகுதிகளில் கடந்த நவம்பர் 26 ஆம் திகதி முதல் விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். பஞ்சாப், அரியானா மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் நடத்தி வரும் இந்த போராட்டம் 43 ஆவது நாளாக நீடித்து வருகிறது.

இந்தப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கில் மத்திய அரசு விவசாயிகளுடன் ஏழு சுற்றுப் பேச்சுகளை இதுவரை நடத்தி இருக்கிறது. இதில் கடந்த மாதம் நடந்த 6 ஆவது சுற்று பேச்சில், மின்கட்டண விவகாரம், வேளாண் கழிவுகள் எரிப்பதற்கு அபராதம் ஆகிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டது.

எனினும் வேளாண் சட்டங்களை திரும்பப் பெறுதல், குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு சட்டப்பூர்வ உத்தரவாதம் ஆகிய 2 கோரிக்கைகள் தொடர்பாக இன்னும் ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை. இது தொடர்பாக கடந்த 4 ஆம் திகதி நடந்த 7 ஆவது சுற்றுப் பேச்சும் தோல்வியில் முடிந்தது.

எனவே இரு தரப்பினரும் நாளை மீண்டும் பேச்சு நடத்தத் திட்டமிட்டு உள்ளனர். இதில் தீர்வு எட்டப்படும் என மத்திய அரசு நம்பிக்கை வெளியிட்டு உள்ளது.

இந்நிலையில், டெல்லியில் விவசாயிகள் அணி திரண்டு இன்று டிராக்டர் பேரணி நடத்த முடிவு செய்தனர். இதன்படி, டெல்லியின் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகள் உட்பட டெல்லியின் நான்கு எல்லைகளில் இருந்தும் இந்த பேரணி இன்று நடைபெற்றது.

இதனை முன்னிட்டு, வன்முறை சம்பவங்கள் எதுவும் நடந்து விடாமல் இருக்க, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக எல்லை பகுதிகளில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டது. இதேபோன்று, முக்கிய பகுதியான சிங்கு எல்லையில் பொலிஸார் அதிக அளவில் குவிக்கப்பட்டனர். விவசாயிகளின் டிராக்டர் பேரணியை முன்னிட்டு அரியானாவில் உள்ள குண்ட்லி – மனேசர் – பல்வால் சுங்க சாவடி பகுதியிலும் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு உள்ளது.

விவசாயிகள் பல்வால் பகுதி வரை டிராக்டர் பேரணியாக செல்ல முடிவு செய்திருந்தனர். பின்னர் இதில் மாற்றம் செய்து, நொய்டா வரை டிராக்டரில் பேரணியாக சென்று விட்டு காஜிப்பூருக்கு திரும்புவது என்று முடிவு செய்தனர்.

பேரணியை கண்காணிக்க பொலிஸார் போதிய அளவில் குவிக்கப்பட்டு உள்ளனர். பேரணியை வீடியோ பதிவு செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று காசியாபாத் மாவட்டத்திற்கான கூடுதல் மாவட்ட மாஜிஸ்திரேட் (நகரம்) சைலேந்திர குமார் சிங் கூறினார்.

அரியானாவில் பல்வால் பகுதியில் இருந்தும் விவசாயிகள் பேரணியாக டிராக்டரில் புறப்பட்டு சென்றனர். வேளாண் சட்ட எதிர்ப்புகளை வெளிப்படுத்தும் வகையில் விவசாயிகள் திரளாக பேரணியில் கலந்து கொண்டனர்.

# இந்தியாவில் 1 கோடிப் பேர் தொற்றிலிருந்து மீண்டனர்!

புதுடில்லி,ஜன.07

இந்தியாவில் கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை ஒரு கோடியைக் கடந் துள்ளது.

இந்தியாவில் கொரோனா பாதிப்புகள் பல மாநிலங்களில் சீராக குறைந்து வருகின்றன. இந்த நிலையில், இந்திய அரசு வெளியிட்டு உள்ள செய்தியில், நாட்டில் கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 1 கோடியை கடந்துள்ளது என தெரிவித்து உள்ளது.

இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 19,587 கொரோனா நோயாளிகள் குணமடைந்து சென்றுள்ளனர். இதனையடுத்து, தேசிய குணமடைந்தோர் விகிதம் 96.36 சதவீதம் ஆக உயர்வடைந்து உள்ளது.

இது உலகில் மிக அதிக எண்ணிக்கை ஆகும் என்று தெரிவித்து உள்ளது.



## அமெரிக்க காங்கிரஸில் அல்லோலம்

# பைடனின் வெற்றியை உறுதி செய்வதை தடுத்து நாடாளுமன்றம் திடீர் முற்றுகை!

## சூட்டில் பெண் பலி; ஊரடங்கு அமுல்



பொதுவில் அமைதியாக நடக்கின்ற அமெரிக்க ஆட்சி அதிகாரக் கைம்மாற்றம் இந்த தடவை பெரும் அல்லோலங்களைச் சந்தித்துள்ளது.

வொஷிங்டனில் கப்பிடோல் எனப்படும் புகழ் பெற்ற அமெரிக்க காங்கிரஸ் கட்டடம் நேற்று ட்ரம்ப் ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்களின் வன்முறைக் களமாக மாறியது.

நவம்பர் 3 ஆம் திகதி நடந்த தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான ஜோ பைடன் பெற்ற வெற்றியை உறுதி செய்வதற்காக நாடாளுமன்றத்தின் இரு அவைகளினதும் கூட்டு அமர்வு நேற்று புதன்கிழமை நண்பகல் ஆரம்பித்த சிறிது நேரத்தில் அங்கு பெரும் களேபரம் வெடித்தது.

ஆயிரக்கணக்கான ட்ரம்ப் ஆதரவாளர்கள் ஆயுதங்களுடன் காங்கிரஸ் கட்டடத்தை முற்றுகையிட்டு அதன் ஜன்னல்களை உடைத்து உள்ளே நுழைந்து பெரும் அடிதடியில் இறங்கினர். கப்பிடோல் பொலிஸாரால் அவர்களைத் தடுத்து நிறுத்த முடியாமற் போனது. இதனால் நாடாளுமன்ற அமர்வு உடனடியாக நிறுத்தப்பட்டு உறுப்பினர்கள் அவசரமாக அங்கிருந்து வெளியேற்றப் பட்டனர்.

'பின்வாங்க மாட்டோம்' என்று கோஷங்களை எழுப்பியவாறு காங்கிரஸ் கட்டடத்தினுள் நுழைந்த கலகக்காரர்கள் சபாநாயகர் நான்ஸி பெலோசி அம்மையாரது மேசை வரை முன்னேறிச் சென்று ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். அந்தச் சமயம் எதிர்ப்புக் கோஷங்கள் எழுதப்பட்ட காகிதங்கள் சபாநாயகரது கணனி மேசை மீது போடப்பட்டன என்று தகவல் வெளியாகி உள்ளது.

காங்கிரஸ் கட்டடத்தினுள் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் எனக் கூறப்படும் பெண் ஒருவர் அவசரமாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படும் காட்சிகள் வெளியாகி உள்ளன. அவர் பின்னர் உயிரிழந்தார் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. காங்கிரஸ் கட்டடத்தினுள் இரண்டு வெடி குண்டுகள் அகற்றப்படுவதைக் கண்டதாக சிஎன்என் செய்தியாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார். ட்ரம்ப் ஆதரவாளர்களை வெளியேற்றுவதற்காக கலகம் அடக்கும் பொலிஸாரும் தேசிய காவல் படையினரும் அங்கு அழைக்கப்பட்டுள்ளனர். மாலை ஆறு மணிமுதல் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்டடம் படையினரது முழுப் பாதுகாப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது என்று பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜோ பைடன் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளை மாளிகையில் அதிபராகப் பதவி ஏற்கவிருக்கின்ற நிலையில் அமெரிக்காவில் வெடித்திருக்கும் இந்த வன்செயல்களை வெளிநாடுகள் பலவும் கண்டித்துள்ளன.

'ஜனநாயகத்தின் மீதான பலமான தாக்குதல் இது' என்று பிரான்ஸின் வெளிவிவகார அமைச்சர் ஜீன் வைவஸ் லீ றைன் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்திருக்கிறார்.

'ஜனநாயகத்தை மிதிப்பதை உடனடியாக நிறுத்துங்கள்' என்று ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சர் ஹெய்கோ மாஸ், அதிபர் ட்ரம்ப்பின் ஆதரவாளர்களிடம் கேட்டுள்ளார்.

பிரிட்டிஷ் பிரதமர் பொறிஸ் ஜோன்சனும் அமெரிக்க காங்கிரஸ் வன்செயல்களைக் கண்டித்துள்ளார்.

காங்கிரஸ் கட்டடம் மீதான வன்முறையை 'அவமானகரமான காட்சிகள் ' என வர்ணித்துள்ள அவர், ஜோ பைடனின் அதிகார மாற்றத்தை அமைதியாகவும் முறைப்படியும் முன்னெடுக்குமாறு அமெரிக்கர்களைக் கேட்டிருக்கிறார்.

---

## 'மொடர்னா' ஊசியும் பாவனைக்கு

# பிரான்ஸில் 38 வீதமானவர்களே தடுப்பூசி ஏற்றுவதற்கு சம்மதம்!

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் அமெரிக்காவின் மற்றொரு கொரோனா வைரஸ் தடுப்பு மருந்தான 'மொடர்னா' ஊசி பாவனைக்கு வருகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் மருத்துவ முகவரகம் 'மொடர்னா' தடுப்பூசியை அதன் ஒன்றிய நாடுகளில் பயன்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது.

இந்நாடுகளில் ஏற்கனவே அமெரிக்கா – ஜேர்மனி கூட்டு நிறுவனத்தின் 'பைசர் – பயோ என்டெக்' தடுப்பூசி பாவனைக்கு வந்துள்ளது. அடுத்துவரும் நாள்களில் மொடர்னா தடுப்பு மருந்தும் பயன்பாட்டுக்கு வரவுள்ளது. மொடர்னா தடுப்பூசி தயாரிப்புப் பணிகள் பிரான்ஸில் உள்ள அதன் தொழிற்சாலையிலும் நடைபெறவுள்ளன.

இதேவேளை –

இரண்டு தடுப்பூசிகள் பாவனைக்கு வந்துள்ள பிறகும் அவற்றின் மீது மக்களுக்கு இன்னமும் நம்பிக்கை ஏற்படவில்லை.

பிரான்ஸ் தொலைக்காட்சி ஒன்றில் வெளியாகிய கருத்துக் கணிப்பு முடிவுகளின்படி 38 வீதமானவர்கள் மட்டுமே தடுப்பூசி ஏற்றிக்கொள்ள ஆர்வமாக உள்ளனர் என்பது தெரியவந்துள்ளது. 45 வீதமானவர்கள் தடுப்பூசியை மறுத்துள்ளனர். 17 வீதமானோர் போடுவதா விடுவதா என்ற குழப்பத்தில் உள்ளனர். இளவயதினரே தடுப்பூசி ஏற்ற மறுப்பவர்களில் பெரும் பங்கினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய கட்டுப்பாடுகள் மற்றும் தடுப்பூசி ஏற்றும் திட்டங்கள் தொடர்பான விவரங்களை அறிவிப்பதற்காக பிரதமர் செய்தியாளர் மாநாட்டை கூட்டவுள்ளார்.

அதற்கு முதல் நாளான புதன்கிழமை நாடெங்கும் 25 ஆயிரத்து 379 புதிய தொற்றுக்கள் உறுதிப்படுத்தப் பட்டுள்ளன. 24 மணிநேரத்தில் 291 மரணங்களும் பதிவாகி உள்ளன.

---

## இரு வார பதவிக்காலம் முடிவதற்குள்

# குற்றப் பிரேரணை மூலம் ட்ரம்பை பதவி நீக்க வொஷிங்டனில் முயற்சி?



பதவிக்காலம் முடிவடைய இன்னமும் இரண்டு வாரங்களே இருக்கின்ற நிலையில் அதிபர் டொனால்ட் ட்ரம்பை அதிகாரத்துக்கு அருகதை அற்றவர் என அறிவித்து அவரைப் பதவியில் இருந்து அகற்ற முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அமெரிக்காவின் சில முக்கிய ஊடகங்கள் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றன.

பதவியில் இருந்துகொண்டே நாட்டின் ஜனநாயகத்துக்கு எதிராக ஒரு சதிப் புரட்சிக்கு தனது ஆதரவாளர்களைத் தூண்டியமையின் மூலம் அதிபர் ட்ரம்ப் நாட்டை நிர்வகிக்கும் தகுதியை இழந்துவிட்டார் என்று அமெரிக்கப் பிரமுகர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அதிபர் ரொனால்ட் ட்ரம்ப் 2020 தேர்தல் முடிவுகளை ஏற்றுக் கொள்வதற்கும் அது தொடர்பான தொடர் நடவடிக்கைகளைக் கையாள்வதற்கும் இயலாத மனநிலையில் இருக்கின்றமையைச் சுட்டிக்காட்டி, ஜனநாயகத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ள அவரைப் பதவி நீக்கவேண்டும் என்ற கருத்தை சில அமெரிக்கப் பத்திரிகைகளும் ஊடகங்களும் வெளியிட்டிருக்கின்றன.

அமெரிக்காவின் முக்கிய அடையாளங்களில் ஒன்றான காங்கிரஸ் கட்டடத்தில் நேற்று புதன்கிழமை நிகழ்ந்த வன்முறைக் கலகங்களுக்கு அதிபர் ட்ரம்ப் தனது ஆதரவாளர்களைத் தூண்டும் விதமாக வெளியிட்ட கருத்துக்களே காரணம் என்று பகிரங்கக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்த நிலையில் ட்ரம்ப் தனது கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனத் தெரிவித்து குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து அவரைப் பதவி நீக்குவதற்காக அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் நீதி விவகாரக் குழுவில் இடம்பெறும் குடியரசுக் கட்சிப் பிரதிநிதிகள் துணை அதிபர் மைக் பென்ஸை தொடர்பு கொண்டுள்ளனர்.

அமெரிக்க அரசமைப்பின் 25 ஆவது திருத்தத்தின்படி அமைச்சரவையின் பெரும்பான்மையுடன் துணை ஜனாதிபதி ஒருவர் அதிபரை நாட்டை ஆள்வதற்கு தகுதியற்றவர் என அறிவிக்க முடியும்.

ஆனால் அரசமைப்பின் படியான இத்தகைய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்பதால் ட்ரம்ப்பின் மிகக் குறுகிய பதவிக்காலத்துக்குள் அது சாத்தியம் அல்ல என்று சில நிபுணர்கள் கூறுகின்றனர்.

---

# ஒஸ்லோ நிலச்சரிவில் ஏழு உடல்கள் மீட்பு!



நோர்வே தலைநகர் ஒஸ்லோவுக்கு அருகே கடந்த வாரம் நிகழ்ந்த களிமண் நிலச் சரிவில் சிக்கிய பத்துப் பேரில் ஏழு பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. நாய்க்குட்டி ஒன்று மட்டும் உயிர் பிழைத்துள்ளது.

காணாமற் போன எஞ்சியவர்களை மீட்கும் முயற்சிகள் கைவிடப்பட்டுள்ளன என்ற துயரமான செய்தியை நோர்வே பிரதமர் எர்னா சொல்பேர்க அறிவித்திருக்கிறார்.

எஞ்சிய மூவரையும் உயிருடன் மீட்க முடியும் என்ற நம்பிக்கை இனியும் இல்லை என்று மீட்புப் பணிகளுக்குத் தலைமை வகிக்கும் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்திருக்கிறார். நிலச் சரிவினால் உருவாகிய சுமார் 700 மீற்றர் நீளமும், 300 மீற்றர் அகலமும் கொண்ட ஆழக் கிடங்கில் கடும் உறை பனிக் காலநிலைக்கு மத்தியில் கடந்த ஏழு நாள்களாக மிக ஆபத்தான மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுவந்தன.

அந்தப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மற்றும் ஒரு சிறிய நிலச்சரிவு ஏற்பட்டது. ஆபத்துக்கு மத்தியில் விசேட மீட்புப்படை வீரர்கள் புதையுண்ட வீடுகளின் இடிபாடுகளை நெருங்கிச் சென்று அவற்றில் சிக்கிக் கிடந்த ஏழு உடல்களை மீட்டுள்ளனர். திங்கட்கிழமை நாய்க்குட்டி ஒன்று காயங்கள் இன்றி உயிருடன் மீட்கப்பட்டது. அதனால் ஓரிருவரையாவது உயிருடன் மீட்க முடியும் என்ற நம்பிக்கை காணப்பட்டது. ஆயினும் அந்த முயற்சிகள் கைகூடவில்லை.

ஒஸ்லோவுக்கு 30 கிலோ மீற்றர்கள் வடகிழக்கே கஜார்டம் எனப்படும் நகரசபைப் பகுதியில் ஆக்ஸ் என்ற கிராமத்தில் அமைந்திருந்த டசின் கணக்கான வீடுகளே கடந்த புதனன்று இரவு நேரம் திடீரெனப் புதையுண்டன.

குழந்தைகள், வயோதிபர்கள் உட்பட பத்துக்கு மேற்பட்டோர் வீடுகளுடன் சேர்ந்து உறை கழியில் சிக்குண்டனர்.

பலத்த காயமடைந்த பத்துப்பேர் ஒஸ்லோ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

நோர்வேயில் இடம்பெற்ற மிக மோசமான நிலச்சரிவுகளில் இதுவும் ஒன்று. சுமை அதிகரிக்கும் போது புதைந்து உருகி விடக்கூடிய தன்மை உடைய களி மண் தரைப் பிரதேசத்திலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

நோர்வே மற்றும் சுவீடன் நாடுகளில் காணப்படும் துரித கழி எனப்படும் மண் வகை பெரும் சரிவு ஏற்படும் போது உருகி நீராகிவிடும் தன்மை கொண்டது.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1985.12.04
மதம் - இந்து V
நட்சத்திரம் - உத்திரட்டாதி
செவ் - 8இல்
பாவம் - -----
கல்வி - Engineering
தொழில் - Engineer UK
எதிர்பார்ப்பு - படித்த அழகான பெண்


மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1992.12.19
மதம் - இந்து V
நட்சத்திரம் - சித்திரை 02
பாவம் - 13 1/2
செவ் - -------
கல்வி - UK பட்டப்படிப்பு
தொழில் - UK PR
எதிர்பார்ப்பு - படித்த ஆங்கில அறிவுள்ள மணமகன் தேவை.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

# இலங்கைக்கு எதிராக புதிய ஆவணம் ஒன்றை ஐ.நாவுக்கு அனுப்ப ஏற்பாடு!

## சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவிப்பு



மியன்மாரில் இடம்பெற்றது போன்று இலங்கையிலும் இனப்படுகொலை இடம்பெற்றதாகத் தகவல்கள் திரட்டப்பட்ட ஆவணமொன்றை ஐ.நாவுக்கு அனுப்புவதற்காவது அனைத்துத் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர் -

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரை நோக்கி மூன்று கோரிக்கைகள் மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளை நோக்கி ஒரு கோரிக்கை என்று நான்கு கோரிக்கைகளைமையப்படுத்திய ஆவணமொன்றைத் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி இறுதி செய்துள்ளது.

இதில் நான் உட்பட கூட்டணியின், பங்காளிக்கட்சிகளான தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம், ஈழத்தமிழர் சுயாட்சிக்கழகத்தின் பொதுச்செயலாளர் அனந்தி சசிதரன் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளோம்.

இந்நிலையில் இந்தக் கோரிக்கை ஆவணம், ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பாதிக்கப்பட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், சிவில் அமைப்புக்கள், சில புலம்பெயர் அமைப்புக்கள் ஆகியவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அந்தத் தரப்பினர் இந்தக் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு கையொப்பமிடும் இடத்து விரைவில் ஐ.நா. செயலாளர் நாயகம் அன்ரோனியோ குட்ரஸ், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்செலட் மற்றும் உறுப்பு நாடுகளுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது. - என மேலும் தெரிவித்துள்ளார்.

## மேரி பஸ்ரியன் அடிகளாரின் நினைவு மன்னாரில் அனுஷ்டிப்பு!

படுகொலை செய்யப்பட்ட அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளாரின் 36 ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்று (புதன் கிழமை) மன்னாரில் நினைவுகூரப்பட்டது.

வங்காலை புனித ஆனால் ஆலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் நேற்றுக் காலை 6 மணிக்கு விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதோடு, ஆலய வளாகத்தில் அமைந்துள்ள அருட்பணி மேரிபஸ்ரியன் அடிகளாரின் சிலைக்கு முன்பாக நினைவுதின நிகழ்வு இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து அருட்பணி மேரி பஸ்ரியன் சமூக முன்னேற்றக் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வங்காலை பங்குத் தந்தை, உதவி பங்குத்தந்தை மற்றும் ஆலய மேய்ப்பு பணி சபையினர், கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தினர், பங்கு மக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மன்னார் பொது வைத்தியசாலையில் இருந்து சென்ற வைத்தியர்கள், தாதியர்கள், பணியாளர்கள் இணைந்து மிகவும் சிறப்பான முறையில் இரத்ததான நிகழ்வை நடத்தினர்.

இரத்த தான நிகழ்வைத் தொடர்ந்து தேவையுடையவர்களுக்கு உதவிகள் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் பஸ் நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனைகள்!



மன்னார் புதிய பஸ்தரிப்பிடத்தில் மக் களிடம் எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்று (புதன் கிழமை) முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மன்னார் எருக்கலம்பிட்டி கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் மன்னார் புதிய பஸ் தரிப்பிடத்தில் வைத்து பஸ்களின் சாரதிகள், நடத்துநர்கள், உணவக உரிமையாளர்கள், வர்த்தக நிலையங்களில் கடமையாற்றுபவர்கள், ஓட்டோ சாரதிகள், பயணிகள் என பல தரப்பட்டவர்களிடம் எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இராணுவம் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்புடன், மன்னார் மாவட்ட தொற்று நோய் விஞ்ஞானப்பிரிவு வைத்திய அதிகாரி வைத்தியர் கே.சுதாகரன், மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி றோய் பீரிஸ், நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி ரூபன் லெம்பேட் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து குறித்த பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பொய் என்பதை ஐ.நாவில் நிரூபிப்போம்!

### சரத் வீரசேகர மீண்டும் உறுதிபடத் தெரிவிப்பு



இலங்கைக்கு எதிராக ஐ.நாவில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யானவை என்பதை மார்ச் மாத மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கை நிரூபிக்கும் என அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் கருத்து தெரிவித்த அவர் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன், மீண்டும் புலனாய்வுப் பிரிவை பலப்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டார்.

மேலும் இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் 8 தீர்மானங்களை, முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கொண்டு வந்திருந்தார்.

அவ்வாறே 30 இன் கீழ் ஒன்று தீர்மானத்துக்கும் கடந்த நல்லாட்சி அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியது என சரத் வீரசேகர தெரிவித்தார்.

இவ்வாறு இராணுவம் மற்றும் புலனாய்வுப் பிரிவைப் பலவீனப்படுத்தும் செயற்பாடுகளையே கடந்த அரசாங்கம் மேற்கொண்டது எனக் கூறினார்.

இந்த நிலையில் இவை அனைத்தும் ஆதாரமற்றக் குற்றச்சாட்டுகள் என்பதை நாம் இம்முறை ஜெனிவா அமர்வில் நிரூபிப்போம் என்றும் அமைச்சர் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனாவிலிருந்து மேலும் 700 இற்கு மேற்பட்டோர் சுகம்!

இலங்கையில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 39 ஆயிரத்து 23 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் மேலும் 761பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 45 ஆயிரத்து 726 ஆக உயர்ந்துள்ளது.

இதில் 6 ஆயிரத்து 486 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 613 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனாத் தொற்றால் இதுவரை 217 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=





லக்சுமி வெதுப்பகம்
ஆறுகால் மடம்.
077 218 9718

கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.01.2021இல் வெளியிடப்பெற்றது.